1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மதிப்புமிகு உறுப்பினருடைய கருத்து நல்ல கருத்து. ஏற்றுக் கொள்கிறோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேர்களிலே எல்லாம் தெய்வங்களை வைத்து எடுத்துச் செல்வார்கள். அதிலிருந்து அதற்கு ஒரு விதி விலக்காக, ஏன் தமிழ்நாட்டிலே, உலகத்திலே, ஒரேயொரு தேரிலேதான் தெய்வத்தை வைத்து எடுத்துச் செல்லாமல் ஒரு தமிழ்ப் புலவரை வைத்து தேரை இழுத்துச் சென்றது புராதனம் மிக்க புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயிலில் இருக்கிற தேராகும். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது பற்றி எல்லாம் மிக நன்றாகத் தெரியும். அந்த மாணிக்கவாசகரை வைத்துத்தான் அந்தத் தேரை இழுப்பது வழக்கம். அந்தத் தேர் திருப்பணி துவங்க முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ரூ. 2 இலட்சத்தை நன்கொடையாக அரசின் சார்பிலே தந்தார்கள். அந்தப் பகுதி வறட்சியான பகுதி. மக்களிடத்திலேயிருந்து நன்கொடை வசூல் செய்ய முடியாது. எனவே மேலும் அதற்கு மானியம் தந்து அந்தத் தமிழறிஞரை சிறப்பிக்கின்ற நேரத்திலே, திருவாசகத்திற்கு சிறப்பு ஊட்டுகின்ற நேரத்திலே அந்தத் தேரை, திருப்பணிகளை முடிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி தந்து உதவுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆவுடையார் கோவில், குதிரை வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட பணத்திலே கட்டப்பட்ட கோவில் என்று சொல்வார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி பணம் வேறு ஒன்றிற்காகச் செலவழிக்க விடாமல், நேரடியாக நல்ல முறையில் அரசின் சார்பில் அந்த ஆலயத்தின் நிர்வாகத்திற்காகவோ அல்லது அந்தத் தேரை அழகுபடுத்துவதற்காகவோ செலவிடப்பட அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

(அ) வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு பற்றி எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அளித்த தன்னிலை விளக்கங்கள் குறித்து.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் 110-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வாசித்தார்கள். அதையொட்டி நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையை, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மொத்தமாக இந்த மனைகளை வழங்கியது முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எல்லாம் மொத்தமாக குறித்திருக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்வது முதலமைச்சர் அவர்களிடத்திலே, யார் யாருக்கு எல்லாம் இந்த ஓராண்டு காலத்திலே மனை வழங்கி இருக்கிறார்கள். அதிலே யார், எத்தனை பேர் முன்னாள் அமைச்சர்கள், இன்னாள் அமைச்சர்கள் இருக்கிறார்கள் ? அரசாங்கத்திலே சிறந்த சேவை செய்தவர்களுக்கு பொது இடங்களை கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறந்த சேவை செய்த அதிகாரிகள் யார் யார் என்ற நான் அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் சில இடங்களுக்கு குறிப்பாக.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூவராகன் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று அலுவலில் உள்ள தொடர்பானவற்றை மட்டும் தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர, இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அருள் கூர்ந்து உட்காரவும்.

திரு. கோ. பூவராகன் ; தலைவர் அவர்களே, இது என்னைப் பொறுத்த பிரச்சினை அல்ல.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி எழுப்புவதாக இருந்தால் என்னிடத்தில் இசைவு கேட்டிருக்க வேண்டும்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, நீங்கள் அன்றைய தினம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய தினம் கேட்டிருக்கலாமே.

(ஆ) சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்தல் குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பாக செய்தித்தாளில் பார்க்கின்ற நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நான்கு நீதிபதிகள் இடம் காலியாக உள்ளன என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 4—4—1989 அன்று ராஜ்ய சபாவில் அறிவித்துள்ளார்கள். அதன் காரணமாக சென்னையிலே உயர்நீதிமன்றத்தில் தற்போது தேங்கிக் கிடக்கும் வழக்குகள் எண்ணிக்கை சுமார் 1,95,200 ஆகும். இப்படி நிறைய வழக்குகள் இருக்கின்ற நேரத்தில் அரசாங்கம் அந்த இடங்களுக்கு நான்கு நீதிபதிகளுடைய பெயரை பரிந்துரை செய்து, விரைவிலே நீதிபதிகளை